13.07.2017

தினமணி

**கோவையில் வேளாண் கண்காட்சி நாளை தொடக்கம்**

இந்தியாவின் மிகப்பெரிய வேளாண் வணிக கண்காட்சிகளில் ஒன்றான அக்ரி இன்டெக்ஸ் 2017, கோவை கொடிசியா வளாகத்தில் வெள்ளிக்கிழமை (ஜூலை 14) தொடங்கி 17- ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 17- ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தக் கண்காட்சியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள், 11 வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 400 அரசு, தனியார், அரசு சார்ந்த நிறுவனங்களின் அரங்குகள் இடம் பெறுகின்றன. கண்காட்சியை கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி தொடக்கிவைக்கிறார்.

இரண்டாவது நாளான சனிக்கிழமை நடைபெறும் கண்காட்சி மலர் வெளியீட்டு விழாவில், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, வேளாண்மைத் துறை அமைச்சர் இரா.துரைகண்ணு, சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வி.ஜெயராமன் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.கண்காட்சி குறித்து வேளாண்மை பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி, கொடிசியா தலைவர் வி.சுந்தரம், செயலர் ஏ.குமார், கண்காட்சித் தலைவர் ஆர்.சௌந்தரராஜன் ஆகியோர் கோவையில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது:
இந்தக் கண்காட்சிக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கால்நடை, விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம், மீன்வளத் துறை, வேளாண் இயந்திர உற்பத்தியாளர் சங்கம் உள்ளிட்ட நிறுவனங்கள் ஆதரவளிக்கின்றன. இந்த ஆண்டு கண்காட்சி, விவசாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்துதல் எனும் தலைப்பில் நடைபெற உள்ளது. இதில், இத்தாலி, இஸ்ரேல், ஜப்பான், அமெரிக்கா, சீனா, ஸ்வீடன், பிரான்ஸ், கென்யா, சுவிட்சர்லாந்து, மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் இருந்தும், மகாராஷ்டிரம், குஜராத், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஆந்திரம், சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் கலந்துகொள்கின்றனர்.

இக்கண்காட்சியில், சூரிய ஒளி பம்புகள், நுண் நீர்ப்பாசனம், துல்லியப் பண்ணை, பண்ணை இயந்திரமயமாக்கல், மண்ணில்லா விவசாயம், தானியங்கி முறைகள், மதிப்புக் கூட்டுப் பொருள்கள், அறுவடைக்குப் பின் தொழில்நுட்பம், வேளாண் சந்தை, மீன், கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட தொழில்நுட்பங்களுக்குச் சிறப்புக் கவனம் அளிக்கப்பட உள்ளது.

ஜூலை 15- ஆம் தேதி உழவே தலை எனும் தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெறுகிறது. 16- ஆம் தேதி பால்வளம் குறித்த கருத்தரங்கு நடைபெறுகிறது. இக்கண்காட்சியில், மண்ணில்லா விவசாயம் குறித்த செயல்முறை விளக்கம், நிறுவனங்கள் தங்களது பொருள்களை அறிமுகம் செய்ய அறிமுக மேடை, ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை நேரடி செயல் விளக்கம் போன்றவை இடம் பெறுகின்றன.

மேலும், வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள், பாசனக் கருவிகள், கால்நடைப் பராமரிப்பு, வேலிகள், எடைக் கருவிகள், பம்புகள், உரம், விதை உள்ளிட்ட பல்வேறு வகையான வேளாண் சார்ந்த பொருள்கள் இடம்பெற உள்ளன. இந்தக் கண்காட்சியில் 1.50 லட்சம் பார்வையாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

மேலும், நாடு முழுவதிலும் இருந்து வேளாண் நிபுணர்கள், உணவுப் பதப்படுத்தும் தொழில்துறையினர், இடுபொருள், விதை உற்பத்தியாளர்கள், முதலீட்டாளர்கள், விநியோகஸ்தர்கள், ஆராய்ச்சியாளர்கள், வங்கியாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர் என்றனர்.

**உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர்களுக்கு வேளாண்துறை அறிவிப்பு**



அருப்புக்கோட்டை அருகே ம.ரெட்டியபட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அறிக்கை: விவசாயிகள் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்கும் போது ரசீதில் சிஜிஎஸ்டி மற்றும் எஸ்ஜிஎஸ்டி வரிகளை தெளிவாகக் குறிப்பிட்ட வேண்டும். இதில் சந்தேகங்கள் ஏற்பட்டால், உரிய ஆதாரங்களுடன் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை விவசாயிகள் அணுகலாம்.

உரம், பூச்சி மருந்து சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்கள் உரங்களுக்கான ஜிஎஸ்டி வரியான 5 சதவீதத்தை சிஜிஎஸ்டி- 2.5 சதவீதம் எனவும், எஸ்ஜிஎஸ்டி - 2.5 சதவீதம் எனவும் குறிப்பிட்டு பில் அளிக்க வேண்டும் .

பூச்சி மருந்துகளுக்கான 18 சதவீத ஜிஎஸ்டியை சிஜிஎஸ்டி- 9 சதவீதம் எனவும் ,எஸ்ஜிஎஸ்டி 9 சதவீதம் எனவும் பிரித்து க் காட்டி பில் செய்திட வேண்டும். ஜிஎஸ்டியைக் கூடுதலாகச் சேர்த்து அதிக பட்ச பழைய விலையையும், அதிக பட்ச புதிய விலையையும் நன்றாகத் தெரியும்படி மூட்டைகளில் அச்சிட்டு விற்பனை செய்யவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**விவசாயத்துக்குத் திரும்புகிறது மூன்றாம் தலைமுறை: வேளாண் பல்கலை.**

**துணைவேந்தர் பெருமிதம்**



தமிழகத்தில் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்களும், வேளாண் தொழிலையே தெரிந்திருக்காத புதியவர்களும் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கியிருப்பது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது என்று வேளாண்மைப்

பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்துள்ளார். கோவை கொடிசியா வளாகத்தில் அக்ரி இன்டெக்ஸ் 2017 என்ற பெயரிலான 17- ஆவது வேளாண் வணிகக் கண்காட்சி வெள்ளிக்கிழமை தொடங்கியது. கண்காட்சியின் தொடக்க விழாவில் துணைவேந்தர் கு.ராமசாமி பேசியதாவது: விவசாயம் லாபம் ஈட்டும் தொழிலாகவும், நமது அடிப்படையான தொழிலாகவும் இருப்பதை உணர்ந்த மூன்றாவது தலைமுறையினர் தற்போது விவசாயத்துக்கு மீண்டும் திரும்பி வருகின்றனர். அவர்களுடன், விவசாயம் பற்றித் தெரியாத மற்றொரு தலைமுறையும் ஆர்வத்துடன் வருவது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

ஒரு காலத்தில் வேளாண் பல்கலைக்கழகத்தில் மொத்தம் உள்ள சுமார் 2,500 இடங்களுக்கு வெறும் 4 ஆயிரம் விண்ணப்பங்கள் மட்டுமே வந்து கொண்டிருந்தன. ஆனால் தற்போது 2,800 இடங்களுக்கு 53 ஆயிரம் விண்ணப்பங்கள் வருகின்றன. இளைய தலைமுறையினர் விழித்துக் கொண்டிருப்பதையே இவை காட்டுகின்றன என்றார் அவர். உணவு உற்பத்தியில் சாதிக்கும் தமிழகம்: நிகழ்ச்சியில் வேளாண் வணிக ஆணையர் சுன்னோங்கம் ஜடாக் சிரு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போது, அண்மைக்கால விவசாயம் காலநிலை மாற்றம், தொழிலாளர் பற்றாக்குறை, உற்பத்தி செலவு அதிகரிப்பு, போதிய விலை கிடைக்காதது போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சவால்களை எதிர்கொண்டு தமிழக விவசாயிகள் சாதித்து வருகின்றனர். 2010- 11- ஆம் ஆண்டைக் காட்டிலும் தற்போது 43 சதவீதம் உணவு தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் 1.13 கோடி டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றார் அவர். இறைச்சிக்கும் சான்றிதழ்: கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.திலகர் பேசும்போது, உற்பத்தியாளர்களாக இருக்கும் விவசாயிகள், தங்களது விளைபொருள்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்வதை அறிந்து கொண்டால் அதிக லாபம் ஈட்ட முடியும்.